
# மேலதிக விபரங்கள்பெற

பாடசாலைஅதிபர் மற்றும் ஆசிரியர்கள்.

சொலத்துாண் மாகாண அரசபாடசாலை திணைக்களம
032 627 29 37

இணையத்தளம் www.vsa.so.ch
– பலமொழிகளிலமைந்த தகவல்கொத்து
– ஜேர்மன் மொழியிலுள்ள விரிவான தகவல்கொத்து



**Volksschulamt**
St. Urbangasse 73
4509 Solothurn
Telefon 032 627 29 37
vsa@dbk.so.ch
www.vsa.so.ch

39722 12/13 tamil

# மேற்பிரிவு 1

**மேற்பிரிவு ௧ இன் 1 ம்வகுப்பு முதல் 3ம் வகுப்புவரை**
(௯ம் ஆண்டுமுதல் ௧௧ம் ஆண்டுவரை)

மேற்பிரிவு 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**மேற்பிரிவு B தகுதிகள்** (குறைந்த தகுதிகள்)
குறைந்த படிப்புத்தகுதியுள்ள மாணவர்கள் இங்கு பயின்று தமது தகுதிக்குரிய தொழிற்கல்வியைக் கற்க தங்களைத் தயார்செய்வார்கள். மேற்பிரிவு B யில் 3 வருடங்கள் கற்கவேண்டும்.

**மேற்பிரிவு E தகுதிகள்** (ஓரளவு தகுதிகள்)
ஓரளவு படிப்புத்தகுதியுள்ள மாணவர்கள் இங்கு பயின்று தமது ஓரளவு கூடிய தகுதிக்குரிய தொழிற் கல்வியைக் (மேற்கல்விக்கான பரீட்சையுடனோ அல்லது பரீட்சையில்லாமலோ) கற்க தங்களைத் தயார்செய்வார்கள். மேற்பிரிவு **E யிலிருந்து** கிம்னாசியும் செல்லும் வாய்ப்பும் இருக்கின்றது (பரீடசையில் சித்திபெற்றால்). மேற்பிரிவு **E யில** 3 வருடங்கள் கற்கவேண்டும்.

**௧௧ வது வருட அரசபாடசாலை இறுதியாண்டு**
௧௧ம் ஆண்டில் மாணவர்களின் தனித்தன்மையான தகுதிகளிற்கேற்ப அவர்கள் தொழிற்கல்விக்குத் தயார்படுத்தப்படுகின்றார்கள். சேவைகள், சமூகம் தொழில்நுட்பம் கைவேலை போன்ற பிரிவுகள் இருக்கின்றன. மேற்பிரிவின் ௨ம் வகுப்பின் இறுதித்தவணையின்போது மாணவர்களுக்கான தகுதிநிர்ணயக் கலந்துரையாடல் நடைபெறும். இதில் அவர்கள் ௧௧ம் ஆண்டில் செயற்படுத்தவேண்டிய குறிக்கோள்கள் நிர்ணயிக்கப்படும்.

**கட்டாய அரச பாடசாலைகள் முடியும் காலம்**
மேற்பிரிபு ௧ முடித்தபின் மாணவர்களுக்கு இறுதிக் கல்விச்சான்றிதழ் வழங்கப்படும். இதில் அவர்களின் திறமைக்குரிய மதிப்பீடுகள் அடங்கியிருக்கும்.

**மேற்பிரிவு P தகுதிகள்** (அதிகூடிய தகுதிகள்)
மேற்பிரிவு P யில் ௨ வருடங்கள் கற்கவேண்டும். இவ்வகுப்பில் படிக்கும் மாணவர்கள் தங்களை கிம்னாசியத்தில் படிப்பதற்குத் தயார்படுத்துவார்கள். இந்தப்பிரிவில் படித்துமுடித்து அடுத்த ௪ வருடங்கள் கிம்னாசியம் படித்துமுடித்தபின்னர் உயர்கல்விக்கான பரீட்சைசெய்து உயர்கல்விகற்க முடியும்.

# கடமைகள்

**பாடசாலையும் ஆசிரியர்களும்**
தகுதியான பாடசாலை அமைப்பிற்கும் முன்னேற்றமான கற்கைநெறிக்கும், அறிவைக் கொடுக்கவும் பெற்றோர்களுடனும் ஏனைய கல்விசார்நிறுவனங்களுடனும் சேர்ந்து ஒத்துழைப்பு செய்வதும் பாடசாலையினதும் ஆசிரியர்களினதும் பொறுப்பாகும்.

**பெற்றோர்**
தங்கள் குழந்தைகளை வளர்ப்பது பெற்றோரின் கடமையாகும். இவர்கள் குழந்தைகளின் கல்விவளர்ச்சிக்கு உதவியும் ஊக்கமும் கொடுக்கவேண்டும். குழந்தைகளின் பாடசாலையுடனும் ஆசிரியர்களுடனும் ஒருங்கிணைந்து பணியாற்றவேண்டும். குழந்தைகள் பாடசாலை விதிமுறைகளை ஒழுங்காகக் கடைப்பிடிக்கவும் வீட்டுப்பாடங்களைச் செய்யவும், பாடசாலைக்கு ஒழுங்காகச் சமூகமளிக்கவும் அவர்களை வழிநடத்தவேண்டும். தகவல் கூட்டங்களில் பெற்றோர் கலந்துகொள்ள வேண்டுமெனப் பாடசாலை எதிர்பார்க்கின்றது. பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் பெற்றோர்கள் தாமாகவே முன்வந்து ஆசிரியர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தவேண்டும்.

**மாணவர்கள்**
௧௧ வருடங்கள் பாடசாலைக்குச்சென்று படிப்பது மாணவர்களின் கடமையாகும். ஒருங்கிணைந்து வாழ்வதற்காக பாடசாலையால் ஏற்படுத்தப்படும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும். பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் சொல்வதைக் கேட்டு நடக்கவேண்டும் . பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லவேண்டும்.

பாடசாலை சம்பந்தப்பட்ட மேலதிக தகவல்களை பாடசாலை அதிபர் தெரிவிப்பார்.

KANTON solothurn
**Volksschulamt**

# அரசபாடசாலை பற்றிய தகவல்கள்



# சொலத்துாண் மாநில அரசபாடசாலை வரவேற்கின்றது


சொலத்துாண் மாநில அரசபாடசாலைகுழந்தைகளுக்கும் இளவயதினருக்கும் தேவையான அடிப்படை அறிவையும் திறமையையும் கற்றுத் தருவதுடன் அவர்கள் தனித்தன்மை உடையவர்களாக வளர்வதற்கு ஊக்கமளிக்கின்றது.

இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு ஒட்டுமொத்த சமுதாயத்தினதும் ஒத்துழைப்பு பாடசாலைக்கு தேவைப்படுகின்றது.குழந்தையின் வளர்ச்சிக்கும் பாடசாலைக்கல்வியின் வெற்றிக்கும் பாடசாலையினதும் பெற்றோர்களதும் ஒன்றிணைந்த ஒத்துழைப்பு அவசியமாகும்.

குழந்தைகளையும் இளவயதினரையும் பாடசாலை மற்றும் தொழிற்கல்வி உலகிற்கு எனது மனமார்ந்த நல்ஆசிகள் வழிநடத்திச்செல்லும்.

*Andreas Walter*

அரசபாடசாலைகளுக்கான மேலதிகாரி



## சொலத்துாண் மாநில அரசபாடசாலைகள் பற்றி அறிந்திருக்க வேண்டிய விடயங்கள்

ஒவ்வொருகுழந்தைக்கும் அரசபாடசாலைக்குச் செல்வதற்கான உரிமையும் கடமையும் இருக்கின்றது. 11 வருடங்கள் கட்டாயம் கல்வி கற்கவேண்டும். பாடசாலை ஆகஸ்ட்மாதம் ஆரம்பமாகும். ஆண் மற்றும் பெண் பிள்ளைகளுக்குமான பாடங்கள் எல்லாம் பொதுவானவை.

மாநிலம், கிராமம் மற்றும் பெற்றோர்களின் கூட்டுமுயற்சிதான் அரசபாடசாலை ஆகும். சொலத்துாண் மாநில அரசபாடசாலைகள் யாவும் தரமாக ஒழுங்கமைக்கப்பட்ட பாடசாலைகள் ஆகும்.

சாதாரணவகுப்பில் படித்தாலும் பிரத்தியேகமான உதவிகள் தேவைப்படுகின்றகுழந்தைகளுக்கென விசேடபயிற்சி வகுப்புக்கள் உள்ளன.

# ஆரம்பப்பிரிவு



**1ம் 2ம் கின்டர்கார்டன் வகுப்புக்கள்**

(1ம்ஆண்டுமுதல் 2ம் ஆண்டுவரை)

கின்டர்கார்டன் அரசபாடசாலையின் முதலாவதுபடியாகும்.குழந்தைகள் 4 வயது பூர்த்தியானபின் செல்வார்கள்.


குழந்தைகள் கின்டர்கார்டனில்

- தனது அனுபவங்களையும் வாழ்கைமுறையையும் விரிவுபடுத்தவும்
- சுயமாக இயங்கவும்
- தன்வயதுள்ள மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து செயல்படவும்
- தனது சமூகத்திற்கு தன்னால் இயன்ற பங்களிப்பைச் செய்யவும்

விளையாட்டுமூலமாகக் கற்பார்கள்

கின்டர்கார்டனிற்குப்பிறகு குழந்தைகள் 1ம் வகுப்பில் காலடிபதிப்பார்கள். கின்டர்கார்டன், ஆரம்பப் பாடசாலை, பெற்றோர் ஆகியோரின் வழிநடத்தலில் அவர்களின் 1ம் வகுப்பு ஆரம்பமாகும்.

**ஆரம்பப்பிரிவு 1ம் வகுப்பு முதல் 6ம் வகுப்புவரை**



(3ம் ஆண்டுமுதல் 8ம் ஆண்டுவரை)

ஆரம்பப்பிரிவு

- மொத்தம் 6 வருடங்களாகும்
- குறிக்கோளைநோக்கிய படிப்பிற்கு அத்திவாரமாக அமையும்
- தனித்தன்மையுடைய உள, உடல் மற்றும் இசையறிவை விருத்திசெய்ய உதவுகின்றது.
- சமுதாயத்தை அமைக்க ஊக்கமளிப்பதுடன் அதனைச்செயல்படுத்துமாறு ஆணையிடுகின்றது.
- சுயமாகவும் தன்னம்பிக்கையுடனும் முடிவுகளை எடுப்பதற்கு ஊக்கமளிப்பதுடன் அதனைச் செயல்படுத்துமாறு ஆணையிடுகின்றது

3ம் வகுப்பிலிருந்து முதலாவது வேற்றுமொழியான பிரெஞ்சும் 5ம் வகுப்பிலிருந்து இரண்டாவது வேற்றுமொழியான ஆங்கிலமும் கற்பிக்கப்படுகின்றது.

பரீட்சை மதிப்பீடுகள் பரீட்சைஅறிக்கையில் பதியப்படும். செயல்திறன், படிக்கும்விதம் பழகும்விதம் போன்றவை பற்றிய மதிப்பீடுகளும் அறிக்கையில் பதியப்படும். ஒன்றுவிட்ட வகுப்பேற்றும் முறைகள் இங்கு இல்லை.குழந்தைகள் ஒருவகுப்பு முடிய மற்றவகுப்பிற்கு முறையாக வகுப்பேற்றப்படுவார்கள்.

மேற்பிரிவிற்கான வகுப்பேற்ற நடைமுறைகள் யாவும் மாநில விதிமுறைகளுக்குட்பட்டவை

# பாடசாலைப் பயணம் ஒரு கண்ணோட்டம்

மாநிலமானது குழந்தைகளினதும், இளவயதினரதும் அறிவிற்கும் திறமைக்குமேற்ப அவர்கள் வளர்ச்சிபெற பலதரப்பட்ட வகையிலான கல்வித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது கீழ்கண்ட வரைபடத்தில் மேலதிக தரவுகளை நீங்கள் காணலாம்.

பலவீனமான குழந்தைகளுக்கும் இளவயதினருக்கும் அவர்களுக்குத் தேவையான விசேட பயிற்சிகளுக்குமான சேவைகளும் இருக்கின்றது

